முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 621**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**11.06.2021**, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரமானந்தசதா சிவ சற்குருவே
காரிருளை போக்கி இந்த கலியுகத்தில்
கந்தவேலன் ஞானஒளி ஏற்றி அருள வந்த
2. அருளவந்த எந்தன் அவதார ஞானியே
அரங்கனே உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆறுமுகப்பெருமான் யானும் இதுகாலம் விளம்பிடுவேன்
அப்பனே உன் தர்மம் உலகை வெல்லும்
3. வெல்லுமப்பா உன் கொள்கை இந்த கலியிடரை
வென்று சடுதி ஞானயுகமாற்றமாக அருளும்
நன்றுபெற உன் தர்மம் செய்துவரும் மக்களே
ஞானிகளாகி ஞானயுகம் படைப்பர்
4. படைக்கவல்ல மகா சக்தியை
பரமனாக நீ மகா சூட்சுமமாய்
தடையற தீட்சைவழி அருளி
தரணியோருக்கு தர்மத்தை வழிவகுத்து
5. வழிவகுத்து ஞானகொள்கைகளை உந்தன் உபதேசங்களாக
ஞானமாக உலகமெங்கும் அருளிவர
தானதர்மம் கொண்டு உலகோரை காத்துவர
தவசி உன் கொள்கை வளரவளர
6. வளரவே உலகில் பசிபிணி விரைந்து ஓடும்
வல்லமைபட உலகே வளமாகி இயற்கை பலமோடு
பலமான ஞான ஆட்சிக்காலம் உருவாகும்
பழுதில்லா ஞானிகளும் உலகமெங்கும் வெளிப்பட்டு
7. வெளிப்பட்டு அரங்கன் கொள்கை விரிவாக விரிவாக
வையகமே ஞானவான்கள் படைகள் நிரம்பி
தெளிவு ஞானம் அழியாமை என்கின்ற மகாசக்தியோடு
திரு அருள்பட உலகோர்கள் மெய்நிலை பெருகி
8. பெருகியே அரங்கன் நீவகுத்த கொள்கைகளின் மூலமாகவும்
பிசகில்லாத உன் தர்மத்தின் மூலமாகவும்
ஆறுமுகப்பெருமான் வழிபாட்டை அளவில்லா செய்து
அழியாமையோடு இந்த உலகமாற்றத்தை கண்டு மகிழ்வர்

9. மகிழவே மகாதவசியாக வந்த யோகி நீ
மக்களை மகிழ்விக்க வந்த மாதவசி நீ
தேக்கமின்றி அகிலத்தார் உன் வழி
தொடர்ந்து வரவர அற்புதம் சடுதி உலகில்நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேளலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.